[1982 பிப்ரவரி 16

இணைப்பு I

[125-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண். 188-க்கான விடையைக் காண்க].

விவர அறிக்கை.

சணல் மற்றும் புளிச்சை சாகுபடி பற்றிய சோதனைகள் 1979-ம் ஆண்டு ஆடுதுறை நெல் ஆராய்ச்சி நிலையத்திலும், கடலூர் கரும்பு ஆராய்ச்சி நிலையத்திலும் மேற்கொள்ளப் பட்டன.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகமும் கடலூர் கரும்பு ஆராய்ச்சி நிலையத்தில் சணல் மற்றும் புளிச்சை சாகுபடி பற்றிய சோதனைகள் மேற்கொண்டது.

ஆடுதுறை நெல் ஆராய்ச்சி நிலையத்தில் மேற்கொண்ட பரிசோதனைகள் பற்றிய விவரங்கள்:

1979-ம் ஆண்டு சணல் பயிர் மற்றும் புளிச்சை பயிர் சாகுபடி பற்றி பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. சணல் பயிரில் ஜெ.ஆர்.சி. 212 ரகமும், புளிச்சை பயிரில் எச்.சி. 583 ரகமும் பரிசோதனை செய்யப்பட்டன. இவ்விரு பயிர்களும் 1979-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் விதைக்கப்பட்டு 65 நாட்களில் அறுவடைக்கு வந்தன. சணல் ஹெக்டேருக்கு 26.4 டன்கள் செடிகளும் (ஈர செடிகள் எடையளவு) புளிச்சை பயிரில் 23.3 டன்கள் செடிகளும் (ஈர செடிகள் எடையளவு) கிடைத்தது. இதிலிருந்து கிடைத்த நாரின் அளவு சணல் பயிரில் 333 கிலோ வாகவும் புளிச்சை பயிரில் 463 கிலோவாகவும் இருந்தது.

கடலூர் கரும்பு ஆராய்ச்சி நிலையத்தில் மேற்கொண்ட பரிசோதனைகள் பற்றிய விவரங்கள்:

இந்த நிலையத்திலும் சணல் பயிர் மற்றும் புளிச்சை பயிர் சாகுபடி பற்றிய சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. சணல் பயிரில் ஜெ.ஆர்.சி. 212 ரகமும் புளிச்சை பயிரில் எச்.சி 583. ரகமும் சோதனை செய்யப்பட்டன. 1979-ம் ஆண்டு மே மாதம் விதைக்கப்பட்டு 120 நாட்கள் அளவில் அறுவடைக்கு வநதது.

சணல் பயிரில் ஹெக்டேர் ஒன்றுக்கு 27.2 டன்கள் செடிகளும் (ஈர செடிகள் எடையளவு), புளிச்சை பயிரில் ஹெக்டேர் ஒன்றுக்கு 30.97 டன்கள் (ஈர செடிகள் எடையளவு) செடிகளும் கிடைத்தது. இதிலிருந்து கிடைத்த நாரின் அளவு சணல் பயிரில் 1.475 டன் களாகவும் புளிச்சை பயிரில் 1.142 டன்களாகவும் இருந்தது.

இது தவிர தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகமும் கடலூர் கரும்பு ஆராய்ச்சி நிலையத்தில் சோதனைகளை மேற் கொண்டது. இச்சோதனைகள் மூலம் பிப்ரவரி, மார்ச் மாதத்தில் விதைத்தால் உற்பத்தி 50 டன்வரை (ஈரச் செடிகள் எடையளவு) கிடைக்கும் எனவும், ஏப்ரல், மே மாதங்களில் விதைத்தால் உற்பத்தி 30 முதல் 35 டன்கள் அளவிற்குக் குறைந்து

விடுகிறது எனவும் கண்டறியப்பட்டுள்ளது. எனவே, உற்பத்தி யளவு விதைக்கும் பருவ காலத்திற்கு ஏற்ப மாறுபடுகிறது. நிகர லாபம் எந்தப் பருவ காலத்தில் பயிரிடப்படுகிறது என்பதைப் பொறுத்தும், சாகுபடி முறைகளைக் கையாள்வதைப் பொறுத்தும் ெஹக்டேர் ஒன்றுக்கு ரூ. 62.50 முதல் ரூ. 625/—வரை கிடைக் கிறது. வணிக ரீதியில் பயிரிடுவது, செடிகளைப் பதப்படுத்தி நார் உரிப்பதற்குத் தேவையான நீர்வசதிகளை பொறுத்து இருக்கிறது. இந்தப் பயிர்கள் கோடை காலத்தில் அறுவடைக்கு வருவதால் அத்தகைய நீர் வசதிகள் நமது மாநிலத்தில் தேவையான அளவு இல்லை. எனவே வணிக ரீதியில் இப்பயிர்களைப பயிரிடுவதற் கான சாத்தியக் கூறுகள் மிகக் குறைந்த அளவே தற்போது உள்ளது.

இணைப்பு II.

[—21ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 190-க்கான விடையைக் காண்க].

விவர அறிக்கை.

1981–82 ஆம் ஆண்டில் நெல் உற்பத்தியைப் பெருக்குவதற் காகக் கையாளப்படும் வழிமுறைகள் பின்வருமாறு:—

1. இரக மாற்றம்.

(அ) 20.60 லட்சம் ஹெக்டேர்களில் ஐ.ஆர். வகை இரகங் களைப் பயிரிடுதல், மேலும் 2.60 லட்சம் ஹெக்டேர்களில் உயர் விளைச்சல் இரகங்களைப் பயிரிடுதல்.

(ஆ) சம்பா பட்டத்தில் உயர் விளைச்சல் இரகங்களின் உபயோகத்தைப் பிரபலப்படுத்துதலும், எல்லா மாவட்டங் களிலும் பயிரிடும் பரப்பை அதிகரிக்கத் தீவிர முயற்சி மேற் கொள்ளுதலும்.

(இ) ஏடிடீ, 23, ஏடிடீ, 34: ஏடிடீ, 35, ஐ ஆர். 34, என். எல். ஆர். 9672, ஏ.எஸ்.டி. 15 மற்றும் ஏடிடீ. 36 ஆகிய புதிதாக வெளியிடப்பட்டுள்ள உயர் விளைச்சல் இரகங்களை அறிமுகப்படுத்துதல்.

(ஈ) 9,500 டன்கள் சான்றிதழ் பெற்ற விதைகளை விநியோகித்தல்.

2. உர உபயோகம்.

ஒரு ஹெக்டேருக்கு உர உபயோகத்தை 85 கிலோ தழைச் சத்தாகவும், 36 கிலோ மணிச்சத்தாகவும், 36 கிலோ சாம்பல் சத்தாகவும் அதிகரித்தல்.